# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 December 2016 Issue - 12


ஆசிரியர் உரை

# தேவன் ... பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்

தேவன், தேவாதி தேவன், யெகோவா தேவன். அவர் தான் வானத்தையும், பூமியையும், சர்வத்தையும் உண்டாக்கின மகிமையும், மாட்சிமையும் நிறைந்த தேவன். ஒப்பாரும், மிக்காரும் அற்றவர் (எரே. 10 : 6, 10). இந்த தேவனுடைய தன்மைகள் பற்றி பரிசுத்த வேதாகமம் அநேக இடங்களில் அழகாக அச்சிட்டுக் கொடுத்துள்ளது. ஆம், அவர் இரக்க முள்ளவர், மன உருக்கமுள்ளவர், நீடிய சாந்தமுள்ளவர், மிகுந்த கிருபை உள்ளவர் (சங். 145 : 8, யோனா 4 : 2) என்று. இந்தப் பட்டியல் இத்தோடு முடிவதில்லை. இன்னும் பல தன்மைகளை வேதாகமத்தின் பிற பக்கங் களில் நாம் படிக்க முடியும். இவைகளுக்கெல்லாம் மகுடமாக தேவனின் இன்னொரு தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது தான் “ தேவன் வல்லவர் ” என்பது. அவர் “ வல்லவர் ” என்கிற இத்தன்மைதான் வேதா கமத்தில் முதன் முதலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (ஆதி. 17 : 1). அதுவும், அவராலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. “ நான் சர்வ வல்லமை உள்ள தேவன் ” என்று ஆபிரகாமோடு தரிசனத்தில் பேசியுள்ளார். ஆக, தேவனை நம்புகிறவர்கள், தேவனைப் பின்பற்றுகிறவர்கள் அவர் வல்லவர் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்பதே தேவன் வெளிப்படுத்தும் செய்தியாக உள்ளது.

பரலோக தேவனின் இந்த வல்லமையை முழுக்க முழுக்க உணர்ந்தவ ராகவே பவுலடியார் தனது பக்திப் பயணத்தை நடத்தியுள்ளார். அது மாத்திர மல்ல, தனது பேச்சிலும், எழுத்திலும் இதை வெளிப்படுத்தியுமுள்ளார். அப்ப டித் தன் எழுத்திலே வெளிப்படுத்திய ஒரு வசனத்தைத் தான் இம்மாதத் தலை

யங்கத்திற்காக நான் தெரிந்திருக்கிறேன். அவ்வசனம் II கொரி. 9 : 8ல் உள்ளது. **மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்** என்று.

நாம் வருடத்தின் இறுதி நாட்களில் இருந்து கொண்டிருக்கிறோம். கர்த்தர் அனுமதி கொடுத்தால் புதிய ஆண்டுக்குள்ளாகப் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டும் உள்ளோம். இந்நாட்கள், கழிந்து கொண்டிருக்கும் ஆண்டைக் குறித்து கணக்கெடுக்கும் நாட்களாக நமக்கு இருக்கும். இதுவரைக்குமான இந்த ஆண்டை நாம் திரும்பிப் பார்க்கும் போது, கடந்து வந்த அனுபவங்கள் கலவைச் சுவையுடையதாக இருக்கும். சரி, இது எப்படியோ முடியட்டும் என்று மனதைத் தேற்றிக் கொண்டு, எதிர்வரும் புதிய ஆண்டைக் குறித்துச் சிந்திக்க முற்படுவோம். இப்படிப்பட்ட ஒரு நேரத்தில் தான் நமக்கு இவ்வசனம் கிடைத்திருக்கிறது. " **தேவன் வல்லவராயிருக்கிறார்** " என்று. அதுவும் எதற்கு? பெருகச் செய்வதற்கு! ம்ம்... நன்றாகத் தான் இருக்கிறது.

பரலோகத்தின் தேவன் பெருக்கத்தின் தேவன் தான். ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்த ஒன்றுமில்லாத பூமியில் தான், நாம் காணும் எல்லாவற்றையும் படைத்துள்ளார். (ஆதி. 1 – 1, 2). ஆதியிலே உயிரினங்களையும், ஆணையும், பெண்ணையும் படைத்த தேவன் அவர்களைப் " பலுகிப் பெருகுங்கள் " என்று தான் ஆசீர்வதித்தார். (ஆதி. 1 : 22, 28). ஆக, ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உண்டாக்கின தேவனுக்கு, நம்முடைய வாழ்க்கையின் தேவைகளில் பெருக்கத்தைக் கொடுப்பது லேசான காரியம். நம் யாருக்கும் கிஞ்சித்தும் சந்தேகம் இதில் தேவையில்லை.

ஆயினும், இங்கே கேள்வி என்னவெனில், தேவன் தம்முடைய வல்லமையை நம்மில் விளங்கச் செய்து பெருக்கத்தைக் கொண்டுவர நாம் பாத்திரமுள்ளவர்களாக இருக்கிறோமா என்பதும், தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதை நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் ஏற்றுச் செயல்படுத்துகிறோமா என்பதும்தான். உண்மையைச் சொல்லப்போனால், தேவனுடைய நற்தன்மைகளுக்காக அவரை " **நல்லவர்** " என்று நினைக்கும் பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் அவரை " **வல்லவர்** " என்று முழுமையாக ஏற்றுக் கொள்வதில்லை. அதாவது, எல்லா நிலையிலும் அவரைச் சார்ந்து நிற்பதில்லை. தேவனை " நல்லவர் " என்று நினைப்பதற்கும், அவரை " வல்லவர் " என்று ஏற்றுக் கொள்வதற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. ஆம், நல்லவர் என்பது அவருடைய நற்தன்மைகளுக்குக் கொடுக்கப்படும் " **ஓர் இரகசிய அங்கீகாரம்** ". ஆனால்

அவர் “ வல்லவர் ” என்பது, எல்லாச் சூழ்நிலைக்கும் அவர் போதுமானவர் என்று வெளிப்படுத்தும் “ ஓர் பகிரங்க அறிவிப்பு ”. தேவனை நல்லவர் என்று நினைக்கிறவர்கள் அவருடைய வல்லமையை ஏற்றுக் கொள்ளாம லிருக்கக் கூட வாய்ப்புண்டு. ஆனால், அவரை வல்லவர் என்று நம்புகிற வர்கள், அவர் நல்லவர் என்பதை ஏற்றுக் கொள்ளாமலிருக்க முடியாது.

சரி, இப்பகுதியிலிருந்து நமக்கான பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு முன் தேவன் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று பவுலடியார் எந்தச் சூழ்நிலையில் எழுதினார் என்று இதன் பின்னணித் தகவல்களை நமது வழக்கத்தின்படியாகப் பார்த்து விடுவோம்.

பண்டைய கிரேக்கத்தின் முக்கிய வாணிபப்பட்டணமாகவும், அகாயா பிராந்தியத்தின் தலைநகரமாகவும் இருந்தது தான் கொரிந்து. இதன் பூகோள அமைப்பு இப்பட்டணத்துக்கு மேலும் சிறப்பு சேர்த்தது. ஆயினும், இதன் மறுபக்கத்தை அறியும் போது, அது உதட்டைப் பிதுக்கி, புருவத்தை உயர்த்தச் செய்யும். ஆம், சீரழிந்து போன கலாச்சாரமும், கட்டுக்கடங்காத ஒழுக்கக்கேடும், முறையற்ற விக்கிரக வணக்கமும் இப்பட்டணத்துக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

இப்படிச் சீரும், சீரழிவும் கொண்ட பட்டணத்தில், தன்னுடைய ஊழிய வைராக்கியத்தினாலும், ஆத்தும பாரத்தினாலும் கிறிஸ்துவின் சபையை பவுலடியார் ஏற்படுத்தினார் ( அப். 18 : 1 – 7 ). பாழ்பட்ட கொரிந்துவில் சபையை ஏற்படுத்த முடிந்த பவுலால், சபையிலிருந்து கொரிந்துவை வெளி யேற்ற முடியவில்லை. அதாவது, கொரிந்துவின் பாவ பழக்க வழக்கங் களை முற்றிலுமாக வெளியேற்ற முடியவில்லை. என்ன செய்வது? கேடும், திருக்கும் உள்ளது தானே மானிட இருதயம். தேவனுக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும் விரோதமான பாவங்கள் தங்களைத் திரும்பவும் தீண்ட அனுமதித்துவிட்ட கொரிந்தியர்களோடு, கள்ளப் போதகர்களும் கை கோர்த்துக் கொண்டார்கள். நிலைமையைக் கேட்கவா வேண்டும்! ஆவிக் குரிய அவலம் அத்துமீறிப் போனது. மோசமான பாவங்கள் கூட கூசாமல் நடந்தது. (I கொரி. 5).

அத்தோடு நிற்காமல், வேத வசனங்களுக்கு முன் தாங்கள் தவிடு பொடி யாகி விடுவோம் என்பதை மோப்பம் பிடித்துக் கொண்ட இந்தச் சதிகாரக் கூட்டாளிகள், தனிப்பட்ட பவுல் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்து விட்டார் கள். பவுல் பேச்சிலும், தோற்றத்திலும் வசீகரம் அற்றவர் என்றும், பெருமை பிடித்தவர் என்றும், அப்போஸ்தலத்துவத் தகுதி இல்லாதவர் என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பேச ஆரம்பித்து விட்டார்கள். தனக்குப் பிடிக்காத ஒரு வனைத் தூற்றுவதற்கும், வசைபாடுவதற்கும் நம்மவர்களுக்குச் சொல் லியா கொடுக்க வேண்டும்! நிபுணத்துவம் பெற்றவர்களாயிற்றே!! தேவ

குமாரனாகிய இயேசுவையே பதம் பார்த்த சமுதாயம் தானே இது.

கொரிந்து பட்டணத்து சபையில் காணப்பட்ட இந்த அதீத சூழ்நிலைக்குத் தீர்வு காண்பது அவசியம் என்று கண்ட பவுல், தன் உத்தமக் குமாரர்களில் ஒருவனாகிய தீத்துவை நேரில் அனுப்பினார் (II கொரி. 2 : 12 ). சத்தியத்திற்கடுத்த காரியங்களை லாவகமாகக் கையாளும் திறன் கொண்ட தீத்து, (தீத்து. 1 : 5) பவுலுக்கு ஆறுதலான செய்தியைக் கொண்டு வந்தார். பெரும்பாலானவர்கள் மனம் மாறிவிட்டார்கள் என்பதே அச்செய்தி. உண்மையாய் ஊழியம் செய்கிறவர்களுக்கு மனமாற்றத்தை விடப் பெரிய செய்தி எதுவாக இருக்க முடியும்? ஆகவே, இந்த இரண்டாம் நிருபத்தை மனம் மாறியவர்களுக்கான நன்றிக் கடிதமாகவும், இன்னும் தடுமாறிக் கொண்டிருப்பவர்களுக்கான புத்திமதிக் கடிதமாகவும் பவுல் எழுதி அனுப்பினார்.

சரி, இந்நிருபத்தின் ஊடே வருவது தான் நமக்கான வசனம் II கொரி. 9 : 8. இந்த 9ம் அதிகாரம் பிரசங்கிகளுக்கு அதிகம் பிடிக்கும். ஏனெனில், **கொடுத்தல்** சம்பந்தமாக இது ஆழமாகப் பேசுகிறது. ஆனால், பிரசங்கத் தைக் கேட்பவர்களுக்குப் அவ்வளவாகப் பிடிக்காது. ஒருவருக்குப் பிடிக்கி றதோ இல்லையோ வேத வசனம் வேத வசனம் தான். அது சரியான முறை யில் போதிக்கப்பட வேண்டும் ( I பேதுரு 4 : 11). கவனமாகக் கேட்கப்பட்டு, முறையாகப் பின்பற்றப்பட வேண்டும் ( யாக். 1 : 22). இப்பகுதியில், பவுல டியார் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகளைப் பார்க்கும்போது, “ கொடுக்க வைப்பது ” சுலபமான வேலையல்ல என்பது பளிச்செனப் புரியும். இங்கே உற்சாகமாய்க் கொடுப்பதின் இரண்டு நன்மைகளைப் பவுல் கோடிட்டுக் காட்டுகிறார். முதலாவது, கொடுப்பது ஆசீர்வாதமானது. பெருக்கத்தை உண்டு பண்ணக் கூடியது. இரண்டாவது, தேவையிலும், குறைவிலுமிருப்பவர்களுக்கு நன்மையானது.

இப்பகுதியில் தான், நம்முடைய தலைப்புக்கான வசனம் வருகிறது. இது ஒரு வாக்குத்தத்த வசனம். வாக்குத்தத்தங்கள் அனைத்துமே எப்பொழுதும் நிபந்தனையுடன் கூடியவைகள். இவ்வசனமும் அதற்கு விதி விலக்கல்ல. கொரிந்து சபையார், தேவகாரியத்தில் உண்மையுள்ளவர் களாயிருந்து, உற்சாகமாய் செயல்பட்டால்தான், தேவன் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதே அந்த வாக்குத்தத்தம்.

இக்கருத்தை ஆதாரமாகக் கொண்டு நமக்கான ஒரு மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ள இப்பொழுது முயற்சிப்போம்.

**I தேவன் பெருக்கத்தைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார்**

தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நம்முடைய சரீரத் தேவைகளைச் சந்தித்துப் பெருக்கத்தைத் தர

தேவன் வல்லவராயிருக்கிறார் என்பது.

பெருக்கம் என்னும் வார்த்தையின் பொருள் மிகுதி. பெருக்கம் அல்லது மிகுதி என்பது தேவைக்கும், போதுமானதுக்கும் அடுத்த ஓர் நிலை. இப்பூமியில் வாழக்கூடிய நமக்கு, மாம்சத்தையும், எலும்பையும் கொண்ட சரீரத்திற்கும், வாழ்க்கைக்கும் தேவைகள் என்பது இல்லாம லிருக்காது. ஆயினும், எல்லாத் தேவைகளையும், சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளும் திராணி நமக்கு இல்லை. என்னால் எல்லாம் முடியும் என்று வீரவசனம்பேசி மார்தட்டுபவர்கள் கூட ஒரு கட்டத்தில் மண்ணைக் கவ்வுவதை நாம் பார்த்துக் கொண்டு தான் உள்ளோம். இவ்வுண்மைக்கு வலுசேர்க்கும் வசனம் சகரியா தீர்க்கன் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. “ பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தி னாலும், அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் ” என்று.( சகரியா 4 : 6 ). தேவன் மீது நம்பிக்கையுடையவர்கள் இதைப் புரிந்து வாழ்வது அவசியம்.

தேவனுக்கு உண்மையாகவும், அவர் சித்தம் நிறைவேற்றுகிறவர்களா கவும் இருப்பவர்களையே அவர் ஆசீர்வதித்துப் பெருகச் செய்ய வல்லவராக இருக்கிறார். இயேசுவின் வார்த்தைகள் இதை உறுதி செய்கிறது. இயேசு வினிமித்தமாகவும், அவருடைய சுவிசேஷத்தினிமித்தமாகவும் தியாகம் செய்கிறவர்கள், “ இம்மையிலே ” நூறத்தனையாகவும், “ மறுமையிலே ” நித்திய ஜீவனையும் அடைவான் என்று கூறியுள்ளார். ( மாற்கு 10 : 31). இம்மையிலே நூறு மடங்கு என்பது பெருக்கம் இல்லையா?

அப்போஸ்தலன் பவுலும் இக்கருத்தைத் தொடாமலில்லை. தான் மிகவும் நேசித்த, தன் சரீரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தாராளமாய்க் கொடுத்து உதவிய (பிலி. 4 : 16). பிலிப்பு பட்டணத்து சபையாருக்கு எழுதும் போது, **என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்** (4 : 19) என்று கூறியுள்ளார். குறை வுகள் சந்திக்கப்படும் என்று அவர் குறிப்பிடவில்லை. மாறாக, குறைவுகள் நிறைவாகும் என்றே வலியுறுத்துகிறார். இது பெருக்கம் இல்லையா ? சொல்லுங்கள்.

அருமையானவர்களே, எதிர்வரும் புதிய ஆண்டு பெருக்கத்தின் ஆண் டாக இருக்க வேண்டுமென்று விரும்புகிற நாம் நம்முடைய பங்காக என்ன செய்ய வேண்டுமென்று புரிகிறதா? இயேசுவுக்காகவும், அவருடைய சுவிசே ஷத்திற்காகவும் தியாகம் செய்து, அவர் சித்தம் நிறைவேற்ற நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். பவுலடியார் கலாத்தியருக்கு எழுதும் போது, “ வேறொரு சுவிசேஷம் இல்லை ” (கலா 1 : 7) என்று கூறுவதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது. சுவிசேஷம் ஒன்றுதான் எனில், நம் விருப்பப்படி நம் பக்தி வாழ்க்கையை நடத்தாமல், அந்தச் சுவிசேஷத்தின் உபதேசம் எது என்று

கண்டுபிடித்து, அதற்கு நம்மைக் கீழ்ப்படுத்த வேண்டும். அப்படிச் செய்பவர்களுக்குப் பெருக்கத்தைக் கொடுக்க தேவன் வல்லவராகவே இருக்கிறார்.

**II தேவன் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறார்**

தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், நாம் அவரிடத்தில் ஒப்புக் கொடுப்பவைகளைக் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்பது.

நம்மையும், நாம் ஒப்புக்கொடுப்பவைகளையும் தேவன் காத்துக் கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்பு நம் எல்லோருக்குமே உண்டு. தவறில்லை. ஆனால், தேவன் காக்க வேண்டுமென்று எதிர்பார்க்கும் நாம் நம்மைத் தேவனுக்கு **ஒப்புக்கொடுக்கிறவர்களாக** இல்லாமல் " **ஒப்புக்குக்** " கொடுக்கிறவர்களாகவே உள்ளோம். ஆகவே தான், நாம் விரும்புகிறபடி நமக்கும், நம்முடையவைகளுக்கும், அதாவது நம் குடும்பத்திற்கும், நம் பிள்ளைகளுக்கும், நம் வாழ்க்கைக்கும், நம் விசுவாசத்திற்கும், நம் பரலோக பயணத்திற்கும் பாதுகாப்பு கிடைக்காமல் போய்விடுகிறது. அதினிமித்தம் சஞ்சலம், வருத்தம், கவலை, கண்ணீர் போன்றவைகள் நம்மை சுற்றி வளைத்துக்கொள்கிறது.

ஒப்புக்கொடுத்தலுக்குச் சிறந்த உதாரணம் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தான். " ... நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக **ஒப்புக்கொடுத்தபடியினால்** நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார் " ( ஆதி. 22 : 12 ). **என்ன வந்தாலும், என்ன போனாலும், எது நடந்தாலும், எப்படி நடந்தாலும் கர்த்தருடைய சமூகத்தில் பார்த்துக் கொள்ளப் படும். அவர் எனக்குப் போதும் என்ற தீர்க்கமான மனநிலையைப் பெறுவதே ஒப்புக்கொடுத்தல்.** உச்சியைத் தொட்ட இந்த மனநிலையை ஆபிரகாம் பெற்றிருந்தபடியால் தான், வெட்டுவதற்குக் கத்தி ஓங்கப்பட்ட நிலையிலும், ஈசாக்குக்கு ஒரு சேதமும் வராமல் தேவன் பாதுகாத்தார். புரிகிறதா?

இதே மனநிலைதான், பக்தி வாழ்க்கையைப் பொறுத்தளவில் பவுலடி யாருக்கும் இருந்தது. தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் " ... **ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்** " (1 : 12) என்று கூறினார். இவ்வார்த்தைகளை அவர் எழுதின போது, ரோமச் சிறைச் சாலையில் மரணத்தை எதிர்நோக்கியிருந்தார். ஊழியத்தின் பாதையில் எதிர் வந்த

ஏராளமான பாடுகளுக்கு மத்தியிலும் ( II கொரி. 11 : 16 - 31 ) தன் ஆத்துமாவையும், நித்திய நலனையும் தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்திருந்தார். பவுலடியாரின் ஒப்புக் கொடுத்தலுக்கு அடிப்படை தேவனிடத்தில் அவர் கொண்டிருந்த **விசுவாசம் தான்**. இப்படிப்பட்ட விசுவாசம் இருந்தால் தான் ஒப்புக்குக் கொடுக்காமல் முழுமையாக ஒப்புக்கொடுக்க முடியும்.

அன்பானவர்களே, நாம் ஆரத்தழுவி அணைத்துக் கொள்ள விரும்பும் புதிய ஆண்டில், நாம் எல்லா வகையிலும் காக்கப்பட வேண்டுமென்றால், நாம் என்ன செய்ய வேண்டுமென்று விளங்குகிறதா? நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். ( ரோமர் 12 : 1 ). அடுத்து நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் காக்கப்படும்படியாக பவுலைப் போல நம்முடைய ஆத்துமாக்களை தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

**III தேவன் முற்று முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்**

தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், நம்மை முற்றும்முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்பது.

" **இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்** " ( லூக். 19 : 10 ) என்று தன் வருகையின் நோக்கம் பற்றி இயேசு கூறியுள்ளார். இயேசு தம்முடைய ஊழியத்தின் நாட்களில் சொன்னதைப் பேதுரு, தான் ஒரு குற்றவாளியாக யூத மதத்தின் காரியங்களைக் கட்டுப்படுத்தும் உயர்மட்ட அமைப்பான சனகரீம் சங்கத்திற்கு முன்பாக நின்ற போது, பரிசுத்த ஆவியினால் நிறைந்து, உரத்த குரலில் எவ்விதத் தயக்கமும், பயமுமின்றி " **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்** " (அப். 4 : 12). இந்த இரட்சிப்பைத்தான் இருதயத்தைக் குத்தி உலுக்கிய பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்திற்குப் பிறகு மூவாயிரம் பேர் பெற்றுக் கொண்டனர் (அப். 2 : 40, 41 ).

ஞானஸ்நானத்தின் மூலம் அதுவரைக்குமான பாவங்கள் மன்னிக்கப்பட்டுப்பெறுவது ஆரம்ப கட்ட இரட்சிப்பு. விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறுகிறவர்களைத் தான் கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் ( அப். 2 : 47 ). இப்படிப்பட்ட இரட்சிப்பைத் தான் பிலிப்பு பட்டணத்துக் கிறிஸ்தவர்களும் பெற்றிருந்தனர். அதுமாத்திரமல்ல, இரட்சிப்புக்கேற்றதொரு வாழ்க்கையையும் வெற்றிகரமாக நடத்தி வந்தனர். ஆயினும், பவுலடியார்

அவர்களுக்கு இப்படியாக எழுதியிருப்பதைக் கவனித்தில் கொள்ள வேண்டும். " **ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத் தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்** " (பிலி. 2 : 12) என்று.

பவுலடியார் இங்கு என்ன சொல்லுகிறார்? ஆரம்பகட்ட இரட்சிப்பு வேறு, இறுதிகட்ட இரட்சிப்பு வேறு என்று தானே. இதே கருத்தைத் தான் எபிரெய ஆசிரியர் இப்படியாக வெளிப்படுத்துகிறார். " மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் **அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லராயுமிருக்கிறார்**. " ( எபி. 7 : 25 ). அதாவது, ஆரம்பகட்ட இரட்சிப்பைப் பெற்று, கிறிஸ்துவின் உபதேசத்தில் உறுதியாயிருந்து, அவருக்கு உண்மையாயிருப்பவர்களை எதிராளியின் தந்திரங்களி லிருந்தும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாபதிகளிடமிருந்தும் காத்து இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். ஆம், உலகத்தாரின் பாவங்களுக்காக இரத்தம் சிந்தி, இரட்சிப்பைச் சாந்தியமாக்கின இயேசு, இன்றும், என்றென்றும் ஜீவித்து அவர்களுக்காக வேண்டுதல் செய்து முற்று முடிய இரட்சிக்க வல்லராயிருக்கிறார்.

அப்படியானால், அருமையானவர்களே! இங்கு இரண்டு கேள்விகள் வருகிறது. ஒன்று, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி நாம் ஆரம்ப கட்ட இரட்சிப்பைப் பெற்றுவிட்டோமா? அடுத்து, ஒருவேளை அப்படிப் பெற்றிருப்போமனால், முற்றுமுடிய இரட்சிக்கபடுவதற்கான உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோமா? வருடத்தின் இறுதியில் இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை காண்பது அவசியம். பரலோக பாக்கியம் நமக்குப் கிடைக்க இது ஒன்று தான் வழி முற்று முடிய இரட்சிக்கப் பிதாவும், அவருடைய குமாரனும் வல்லமை யுடைய வர்களே, சந்தேகமில்லை. நாம் நம்மைத் தகுதிப்படுத்திவிட்டோமா என்பது தான் கேள்வி. சிந்தித்துச் செயல்படுவோம்.

நம் தேவன் வல்லவர், நிச்சயமாகவே வல்லவர். சரீர நன்மைகளைக் கொடுக்க வல்லவர். ஒப்புக்கொடுத்ததைக் காக்க வல்லவர். முற்று முடிய இரட்சிக்க வல்லவர். புதிய ஆண்டுக்கு இந்தத் தேவன் போதுமா, போதாதா? போதும், போதும்!! ஆமென். ●

*அடியேனின் புத்தாண்டு வாழ்த்துக்களைக் குடும்பத்தின் சார்பாகவும்,*
*ஆசான் அலுவலகத்தின் சார்பாகவும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்*
*– ஆசிரியர்*

# ஏன் நாங்கள் நரகம் இருக்கிறதாக நம்புகிறோம்?

Bro. J.C. சோட்

**ந**ரகம் இருப்பதை நாம் விசுவாசிப்பதால், சில வேளைகளில், நரக அக்கினி மற்றும் கந்தகம் பற்றி நாம் பிரசங்கிப்பதாக குற்றம் சாட்டப்படுகிறோம். ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கான தண்டனையாக அக்கினிக் கடலிலே தூக்கி எறியப்பட போகிறார்கள் என்பதை நாம் மகிழ்ச்சியோடு சொல்லுகிறோம் என்று ஒரு தவறான கருத்து பலருக்கு இருக்கிறது. வேதாகமம் பேசுகின்ற நரகத்தை நாம் விசுவாசிப்பதும், துன்மார்க்கர் ஒரு நாளில் அங்கே அனுப்பப்படுவார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு யாரும் செல்வதை நாங்கள் விரும்புவதில்லை. தேவனுக்கு விரோதமான தங்கள் வழியில் இருந்து நாங்கள் திரும்ப மாட்டோம் என்று முரண்டு பிடித்து, நிச்சயமான ஆக்கினை தரும் அந்த இடத்திற்கு ஜனங்கள் செல்வதில் உண்மையாகவே எங்களுக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை.

நாம் தொடர்ந்து படிப்பதற்கு முன்பாக, நரகம் பற்றி விளக்க நாம் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் இங்கே என்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒரு வேளை நீங்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். வேத வசனங்களில், சில வேளைகளில் நரகம் என்கிற வார்த்தை மரணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, முத்தேயு 16 : 18 – ல் கிறிஸ்து தாம் எப்படியாக மரிப்பார் என்பதைக் குறித்து பேசி கொண்டிருந்தார். ஆனால், அவருடைய மரணம் கூட இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதை தடுக்க முடியாது. எனவே தான், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை, அல்லது மரணத்தின் வாசல்கள் அதை தடுக்காது என்று வாசிக்கிறோம். ஆயினும், பொதுவாக நரகம் என்பது, துன்மார்க்கர் என்றென்றும் வாழ்கின்ற வேதனை நிறைந்த, அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலாக, நித்திய தண்டனைக்கான இடமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அது நித்திய ஜீவனை இழந்து போன ஆத்துமாக்களின் நிரந்தர குடியிருப்பாக இருக்கும்.

ஆனால், ஒருவர் இப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு ஏன் போக வேண்டும்? அல்லது அன்புள்ள தேவன், ஏன் ஒருவரை இந்த நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? இப்படிப்பட்ட கேள்விகள் நரகம் என்றால் என்ன?

என்பது பற்றி நாம் மேலும் விளக்க வேண்டும் என்கிற அவசியத்தை ஏற்படுத்துகின்றது. நரகமானது ஆரம்பத்தில் பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் தான் ஆயத்தமாக்கப்பட்டது. துன்மார்க்கர் பற்றி பேசும்போது, கிறிஸ்து, நியாயத்தீர்ப்பு நாளிலே, அவர்களைப் பார்த்து, " சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் " என்று சொல்கிறார். (மத். 25 : 41). பிசாசானவன் பாவம், தேவபக்தியின்மை, துன்மார்க்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். எது நன்மையானதோ, எது சரியானதோ அதற்கு நேர் எதிரானவன் பிசாசு. அவன் தேவனுக்கு விரோதியாக இருக்கிறான். அவன் பக்கத்தில் நிற்க தூதர்களும் அவனுக்கு உண்டு. ஆகையால், நரகம் அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக் கிறது. அதே வேளையில், மனித இனத்தின் ஆத்துமாக்களுக்காக நரகம் ஆயத்தமாக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். மனிதன் ஒரு பாவியாக இருந்தாலும் கூட, நரகத்திற்கு தப்பித்துக் கொள்ள தேவன் அவனுக்கு ஒரு வழியைத் தந்திருக்கிறார். மனிதன் தேவனையும், அவர் தம்முடைய குமாரனான இயேசுகிறிஸ்து மூலமாக தருகிற இரட்சிப்பையும் நிராகரிக்கும்போது, அவன் ஆத்துமாவில் இழந்து போய் நரக தண்டனையை அடைகிறான். ஆனால், அப்போது கூட தேவன் மனிதனை அங்கே அனுப்புவது இல்லை. மனிதன் தன்னைத் தானே அங்கே அனுப்பிக்கொள்கிறான். ஆகையால்,மனிதன் நரகம் போவதற்கு தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களையல்ல.

நரகம் எப்போதும் கீழே இருக்கும் ஓர் இடமாகவும், பரலோகம் மேலே இருக்கும் இடமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமம் இரண்டு இடங்களுமே உண்மையாகவே எங்கே இருக்கிறதென்று வெளிப்படுத்தவில்லை. ஆனால், இரண்டு இடங்களுமே அங்கே செல்லும்படி யாரெல்லாம் நியாயந்தீர்க்கப்படுகிறார்களோ அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, நாம் குறிப்பிட்டிருக்கிறபடி, நரகம் என்பது தண்டனைக்கான ஓர் இடமாகும். " தன் சகோதரனை வீணனென்று சொல்கிறவன் எரி நகரத்திற்கு ஏதுவாக இருப்பான் " என்று கிறிஸ்து எச்சரித்தார் (மத். 5 : 22). ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்க்கும்படியாக கிறிஸ்து தம்முடைய தூதர்களை அனுப்புவது சம்மந்தமாகப் பேசும் போது, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத். 13 : 42) என்றார். யோவான் இவ்விதமாக எழுதினார். " அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்

கடலிலே தள்ளப்பட்டான் " (வெளி. 20 : 14, 15) மேலும் யோவான், " பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்( வெளி. 21 : 8 ). சரீர மரணம் என்று ஒன்று இருக்கிறது. முன்பு நாம் வாசித்த வசனத்தில் பேசப்பட்டிருக்கும் இரண்டாம் மரணம் என்பது தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது. நித்திய தண்டனைக்கான இடமாகிய நரகத்தில் தள்ளப்படுதல் என்பது, தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது. நித்திய தண்டனைக்கான இடமாகிய நரகத்தில் தள்ளப்படுதல் என்பது, ஒருவர் தேவனிடத்திலிருந்து துண்டிக்கப்படுதலாகும், அப்படிப்பட்டவருக்கு நம்பிக்கையே இல்லை.

கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரின் ஊழியம் பற்றி யோவான் ஸ்நானன் விவரித்த போது, " மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் " என்றான் ( மத். 3 : 11, 15 ). இங்கே கிறிஸ்து, பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கத்தக்கதான அளவு வல்லமையைப் பெற்றிருப்பார். நிச்சயமாகவே, இது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து செய்த வாக்குதத்தத்தைக் குறிக்கிறது. அவர், பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவாளனை அனுப்புவார். அதன் பின்பு, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றதை நாம் வாசிக்கிறோம் ( யோவான் 16 : 13 ; அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம் ). ஆனால், கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் வல்லமை பெற்றிருப்பார். இது, துன்மார்க்கர் அக்கினிக்கடலில் தூக்கி எறியப்படுவார்கள் என்பதைக் குறிக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமை அல்லது நீதிமான்களை களஞ்சியத்தில் சேர்ப்பார். என்றும் பதர் அல்லது துன்மார்க்கரை அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றும் ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குகிறார்.

துன்மார்க்கர் பற்றிப் பேசும் போது, " அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும்

வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர் களுக்கும் அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும், பகலும் இளைப்பாறுதலிராது " என்று வாசிக்கிறோம் (வெளி. 14 : 10, 11).

இயேசு இப்படிச் சொன்னார்," ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களா யிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்ல வருக்கே பயப்படுங்கள் " (மத். 10 : 28). மறுபடியும் இயேசு, " சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்? " ( மத். 23 : 33 ). இங்கே இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள பாவிகளாகிய பரிசேயர்களையும், மாயக்காரரையும் குறித்து இப்படிச் சொன்னார்.

எபிரெய எழுத்தாளர், " மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிற வன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே, தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரக்கத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபை யின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு பாத்திர வானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் " (எபி. 10 : 28, 29 ) என்று சொல்லியுள்ளார். பவுல், " தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்திற்கும், கீழ்ப்படி யாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் " என்றார் ( தெச. 1 : 7, 8 ). துன்மார்க்கரைப் பற்றியும், நீதிமான்களைப் பற்றியும் பேசும் போது இயேசு, " அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும், போவார்கள் " என்றார் ( மத். 25 : 46 ). மறுபடியும் இயேசு, ராஜ்யத்தின புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ( மத். 8 : 15 ). பவுலடியார், " பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினால் உண்டான நித்திய ஜீவன் " என்றார் (ரோமர் 6 : 23). அதன் பின்பு யோவான், " மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியு மிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தக முமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங் களிலும் வாதிக்கப்படுவார்கள் " என்றார் (வெளி. 20 : 10).

சிலபேர், ஓர் ஆத்துமா நரகத்தில் போடப்படும்போது, அது உடனடியாக அல்லது முற்றிலுமாக அழிந்து போய் விடுகிறது, அதோடு அவர்களின் கதை முடிந்து போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆயினும், நாம் பார்த்திருக்கிறபடி, ஒருவர் நரகத்திற்குப் போய்விட்டால், சதாகாலமும் தண்டக்கப்பட்டு, என்றென்றும் வேதனைப்படுவார். வேறுவிதமாகச் சொன்னால், பரலோகம் எதுவரை நிலைத்திருக்குமோ அது வரைக்கும் நரகமும் நிலைத்திருக்கும். ஆம், இரண்டுமே நித்தியமானது.

இப்போது நாம் வாசித்த வேதவாக்கியங்களை வைத்து, சில இறுதி முடிவுகளுக்கு வருவோம். பிசாசும், அவனுடைய தூதர்களும் நரகத்தில் இருப்பார்கள். துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், மாயக்காரர், பக்தி காரியங்களில் வஞ்சிக்கப்பட்டவர்கள் மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபட்டவர்கள், உண்மையில்லாதவர்கள் மேலும் இப்படிப்பட்டோர் நரகத்தில் தங்கள் பங்கைப்பெறுவார்கள்.

என் நண்பர்களே, கிறிஸ்து அளிக்கும் இரட்சிப்பு குறித்தும், நாம் நரகம் போய்விடாதபடி எடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு முயற்சி குறித்தும், எச்சரிக்கப்பட்டு, நாம் பரலோகம் போக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறோம். ஆனால், தேவன் தமக்குக் கீழ்ப்படியும்படி யாவரையும் கட்டாயப்படுத்தமாட்டார். முடிவு உங்க ளுடையது. கிறிஸ்து கொடுக்க முன்வரும் இரட்சிப்பை நீங்கள் ஒவ்வொ ருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது எங்கள் ஜெபமாயிருக்கிறது. இதோ, இப் பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்று பவுல் சொல்கிறார் ( II கொரி. 6 : 8 ). நாம் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவரிடத்தில் வரும்படி கிறஸ்து நம்மை அழைக்கிறார் (மத். 11 : 28 – 30). நம்முடைய இரட்சிப்பு குறித்து கவலையற் றவர்களாக இருக்கக்கூடாது என்று எபிரெய எழுத்தாளர் நமக்கு புத்திமதி சொல்கிறார் (எபி. 2 : 4).

நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? பரலோகம் செல்வதற்கு ஆயத்த மாகிக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பதில், இல்லையென்றால், நீங்கள் ஆத்துமாவை இழந்தவர்களாகிறீர்கள். நரகம் உங்களுக்காகக் காத்து கொண்டிருக்கிறது. என் நண்பரே, இன்னும் காலம் இருக்கும் போதே கர்த்தருக்குச் செவி கொடுங்கள். அவரை விசுவாசித்து, உங்கள் பாவங் களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக் கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறுங்கள். அப்படி நீங்கள் செய்தால், கிறிஸ்து உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்வார். (மாற்கு 16 :16), (அப். 2 : 38, 47 ). அதன் பின்பு, நீங்கள் கர்த்தருக்காக வாழ முடியும், அவருக்கு உண்மையாக இருந்தால், ஒரு நாள் பரலோகம் உங்கள் வீடாகும். நீங்கள் என்ன செய்தாலும், தயவுசெய்து நரகத்திற்கு போய்விடாதீர்கள். ●

பெண்கள் பகுதி

# "நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவளாயிரு"

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு ஸ்தோத்திரங்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும் இந்த ஆண்டை இன்னும் ஓரிரு நாட்களில் முடிக்க கிருபை செய்வார் என்று காத்திருக்கிறோம். கிறிஸ்தவர்கள் என்ற பெயரை வைத்திருக்கும் நாம் நம்முடைய காலங்களை எப்படி கழித்துக் கொண்டிருக்கிறோம்? வருடங்களை ஆரம்பிக்கிறோம், முடிக்கிறோம், நல்லது. ஆனால் நாம் யார்? நம்முடைய பொறுப்பு என்ன? நம்மைச் சுற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது? சரியா, தவறா? என் பங்கு என்ன? என்னால் என்ன செய்ய இயலும்? தேவனே என்னுடைய வேலை என்ன? என்று நாம் நின்று, அமர்ந்து, அமைதியாக நம்மைப் பார்த்துக் கேட்கிறோமா?

மேலே உள்ள தலைப்பு, அப்போஸ்தலன் பவுல், தன்னால் மிகவும் நேசிக்கப்பட்ட, தன் உத்தமக் குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளில் ஒன்றாக இருக்கிறது. II தீமோ. 4 : 5, இவ்விதம் கூறுகிறது. " நீயோ எல்லாவற்றிலும் மனந்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையை செய், உன் ஊழியத்தை நிறைவேற்று " என்று. இது பவுலுடைய வார்த்தைகள் என்பதை விட ஆவியானவரின் வார்த்தைகள் என்பதே சரி. ஏனெனில், " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது "

இந்த வார்த்தைகளைப் அப். பவுல் ஒரு பாரமான இருதயத்தோடு எழுதுகிறார். தன் இருதயத்தில் புதைந்து, புழுங்கிக் கொண்டிருந்த எண்ணங்களைத் தான் இவ்வுலகைவிட்டு பிரியும் முன்பு எப்படியாவது யாருக்காவது சொல்லிவிடவேண்டும் என்று பரிசுத்த ஆவியானவரின் உந்துதலினாலே விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய, அதுவும் மாயமற்ற விசுவாசத்தில் உத்தமகுமாரனாகியதீமோத்தேயுவுக்கு **நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையை செய், உன் ஊழியத்தை நிறைவேற்று** (II தீ : 4 : 5) என்று வெள்ளித்தட்டில் வைத்த பொற்பழங்களைப் போன்ற இவ்வார்த்தைகளை வைக்கிறார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்பவுல் விசேஷமானவன். சிறப்பான முறையிலேயே,

வித்தியாசமான முறையிலே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம். தேவனால் இயேசுவின் சத்தத்தைக் கேட்ட அதே கையோடு பாவம்போக ஞானஸ்நானம் பெற்று ( அப். 9 : 5,18 ). தன் கிறிஸ்தவ ஓட்டத்தை ஆரம்பித்த பவுல் இயேசுவை மட்டும் நோக்கி மேலும், மேலும், மென்மேலும் ஓடிக்கொண்டே அதுவும் நன்றாக ஓடிக்கொண்டே இருந்தார். இன்றைக்கும் நம்மோடு தேவன் பேசிக்கொண்டிருக்கும் வகையில் பவுல் தன் கைகளால் நிருபங்களை எழுதிக் கொடுத்துள்ளார். இன்றைக்கு நமக்கு வழிகாட்டியும், நாம் பின்பற்றக்கூடியதும், கடைபிடிக்கக்கூடியவைகளும் இவைகளே, இவைகள் மாத்திரமே.

இந்த ஆலோசனைகளை தீமோத்தேயுவுக்கு சொன்னதின் காரணம் என்ன? ஏன் இந்த வார்த்தைகள்? ஆவியானவர் அர்த்தத்தோடு, காலச்சூழ் நிலைகளுக்கேற்ப, பிரச்சனை என்னவென்றறிந்து, அதற்கு தீர்வு எது என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார். இரண்டாம் வசனத்தில் எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு என்று சொல்லிவிட்டு, ஏன் என்று அதன் அவசியத்தையும் சொல்கிறார். கொஞ்சம் நன்றாக கவனிப்போம். **ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர் களாகி, தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதை களுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்** என்று அன்றைய காலச் சூழலை, மக்கள் மனநிலையை மிகவும் தெளிவாகப் புரியும்படி சொல்கிறார். முதல் நூற்றாண்டில் அன்று நிலவிய மக்களின் அதே மனநிலைதான் இன்று 21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடமும் அப்படியே காணப்படுகிறது.

அந்த மனநிலையைத் தன் குமாரனும், அதற்குப் பின்வரும் தலைமுறை உண்மை கிறிஸ்தவர்களும் பெற்றுக்கொள்ளக் கூடாதென்று எச்சரித்து வலியுறுத்துகிறார் பவுல். யாரிடம் அன்பு அதிகம் செலுத்துகிறோமோ அவர்களைத்தான் உரிமையுடன் எச்சரிக்கமுடியும். தேவன் நம்மேல் அன்பு கூடர்ந்ததினிமித்தமும், நாம் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாக தம் ஏக குமாரனை நமக்குத் தந்தருளினார் (யோ. 3 : 16). இந்த அன்புதான் தேவ அன்பு. தான் படைத்த மனிதன் தன்னிடமே, தன்பக்கமே இருக்கவேண்டு மென்பதே அவரின் ஆசை, எதிர்பார்ப்பு. அதற்காக அவர் போட்ட திட்டங்களும், அதற்காக அவர் எடுத்துக் கொண்ட காலம், பயன்படுத்திய பாத்திரங்கள் இவைகளை புரிந்துகொள்ள நமக்கு ஞானம் போதாது. இதே தேவன் தான் பவுலடியாரைக் **கொண்டு நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு என்கிறார்.**

பிரியமான சகோதரிகளே! இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. பொல்லாங்கள் யார்? பிசாசு. அவன் மகா தந்திரசாலி. தேவன் சொல்வதை அப்படியே மறுத்துப் பேசுவதுதான் பிசாசின் வேலை. உண் மைக்குப் புறம்பாக பொய்களைப் பேசுகிறவன். பொய்யை விதைத்து வளரச் செய்கிறவன். பரிசுத்த ஆவியானவர் ஒன்று சொல்லியிருக்கிறார் என்றால் அது இல்லை, இப்படிச் செய்வதினால் தவறொன்றும் இல்லை, தேவனைத்தான் மகிமைப்படுத்துகிறோம் என்றெல்லாம் சொல்லி மக்களை ஏமாற வைத்து, திசைதிருப்பி, அவர்கள் மனதிற்கு ஏற்றவைகளைப் பேசி தனக்கு ஆள் சேர்க்கும் வேலைதான் பிசாசின்வேலை. தீமோத்தேயுவின் காலத்திலேயே ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாத வர்கள் இருந்தார்கள். ஆரோக்கியமான உபதேசம் எது? அது ஒன்று தான். ஒன்றே ஒன்றுதான். புதிய ஏற்பாட்டு உபதேசம். ஆதி அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொண்டு, கடைப்பிடித்து பிரசங்கித்த உபதேசம். இது மக்களுக்குப் பிடிப்பதில்லை. மனது இடம் கொடுக்க மறுக்கிறது. பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. **செவித்தினவுள்ளவர்களாகி** என்றால் தங்களுக்கு எது பிடிக்குமோ அதைக் கேட்பது. தவறு, சரி என்று வித்தியாசம் காட்டாமல் பொதுவாகப் பேசி யாருடைய மனதையும் புண்படுத்தாமல் நல்லவன் என்ற பெயர் வாங்க முயற்சிப்பது. தங்கள் இச்சைகளுக்கு ஆம் என்று சொல்லுகிற போதகர்களைத் **தங்களுக்கு திரளாகச் சேர்த்துக்கொண்டு** என்று வாசிக்கிறோம். அருமையானவர்களே! நாம் வாழும் இந்தக்காலத்திலும் கண்கூடாக நாம் இதைப் பார்க்கிறோம், மறுக்க முடியாது. சத்தியத்துக்குச் செவியை விலக்கி என்று சொல்கிறார். சத்தியம் என்றால் என்ன? **உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்** என்று. இயேசுகிறிஸ்து யோவான் 17 : 17 ல் மிகவும் தெளிவாக கூறுயுள்ளார். அப்படியென்றால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைக் கேட்க மனதில்லாம், தங்களுக்குப் பிடித்தமானவற்றை போதிப்பவர்களைச் சார்ந்து தங்கள் பக்தி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய சத்தியத்தை விட்டுச் சொந்த கதைகளுக்குச் செவி கொடுக்க ஆரம்பித்துவிட்டால் அதற்கு முடிவே இராது. நாம் விட்டுவிட நினைத்தாலும் அது நம்மை விடாது.

ஆனால், இங்கே பவுலடியார் தீமோத்தேயுவிடம் சகோதரனே, நீ இதில் போய் சிக்கிவிடாதே. ஆரோக்கியமான உபதேசத்தில் மனத்தெளிவுடன் இரு என்கிறார். அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டவைகளில் தெளிவுள்ள வனாயிருக்கும்படி எச்சரிக்கிறார். இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயரில் காரியங்கள் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது? அவரை ஆராதிக்கிற விஷயத்தில் என்னென்ன காரியங்கள் கூட்டப்படுகின்றன? அல்லது எதைச் செய்யாமல் விட்டு விடுகிறார்கள்? இரண்டுமே தவறுதான்.

மேலும், **தீங்கநுபவி** என்பதின் நோக்கம் உண்மைச் சத்தியத்தை போதிக்கும்போது எதிர்ப்புகள் வரும். உபத்திரவங்கள் வரும். உபத்திர வங்கள் அவசியம். ஏனென்றால், உண்மையான வசனங்கள் உபத்திர வங்களூடேதான் பலன் கொடுக்கும். எனவே, வசனங்களுக்காக தீங்கநுபவிப்பது பாக்கியமானது.

**சுவிசேஷகனுடைய வேலையைச் செய்** என்கிறார். மனுக்குலத்திற்கு இரட்சிப்பு சுவிசேஷத்தில்தான் உள்ளது. உண்மைக் கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரும் அதன் பொறுப்பைப் பெற்றுள்ளோம். நாமும் ஆத்தும பாரம் கொண்டு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். இதுதான் நம் ஒவ்வொருவரின் ஊழியமாக இருக்க வேண்டும்.

தீமோத்தேயுவின் மேல் அவ்வளவு நம்பிக்கையும், உறுதியும் வைத்திருந்தார் பவுல். எனவே தான், தன் இறுதி காலத்தில் இப்படியொரு கட்டளையைக் கொடுக்கிறார்.

இதை வாசிக்கும் அன்பு சகோதரிகளே! செயல்படுவோம். கொரிந்தி யர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து மனம்திருந்திய பிறகு பவுல் அவர் களை பாராட்டி, **எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே** என்று ( II கொரி 3 : 2 ) மெச்சுகிறார்.

நாமும் கூட மற்றவர்களால் வாசிக்கப்படுகிறவர்களாக இருக்க வேண்டும். எப்படி? நம் வாழ்க்கை சத்தியத்தின்படி இருக்கும்போது நிச்சயம் இது சாத்தியம். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இவைகளை நாம் வேதம் சொல்லுகிறபடி செய்யாமல், நமக்குப் பிடித்தமானபடி கிறிஸ்தவ வாழக்கை வாழ்ந்து கொண்டிருப்போமானால், அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உண்மை சத்தியத்திற்கு செவிகொடுப்போம். ஏனென்றால், பரலோகம் என்பது நாம் இலேசாக அடைந்துவிடக்கூடிய ஓர் இடம் அல்ல. தேவன் இருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் தேவன் சொல்லியபடி செய்யவேண்டும். இதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. வருகிற ஆண்டு இதற்கு உதவி செய்யட்டும். நாம் முயற்சி எடுப்போம். உண்மை சத்தியத்தைத் தேடுவோம், கண்டுபிடிப்போம். தேவன் இதற்கு உதவி செய்வாராக! ஆமென். ●

---

**சபைகூடி வருதல் ஒருவர் தன்னுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிறார் என்பதற்கான குறியீடாகவும், ஒருவருக்கு கர்த்தருடைய சபையின் மீது இருக்கின்ற அக்கறையின் அடையாளமாகவும் இருக்கிறது.**

வாலிபர் பகுதி

# சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது!

சகோ. பென்னி மார்ட்மன்

பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மீண்டும் சந்திப் பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாகவே, வாலிபர்கள் தங்கள் சரீரத்தைப் பேணிக்காப்பதில் அதிக அக்கறை செலுத்துவதுண்டு. உடலுக்கு ஊறுவிளைவிக்கும் உணவுப் பதார்த்தங்களிலிருந்து விலகியிருப்பது முதல் அதிக அக்கறைப்படுவதுண்டு. சில வாலிபர்கள் ஒருபடி மேலே சென்று உடற்பயிற்சி செய்து தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்கிறார்கள். அப்படி உடற்பயிற்சி செய்வதில் எந்தத் தவறும் கிடையாது. அதனால் உடலுக்குப் பிரயோஜனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தும். அப்போஸ்தலனாகிய பவுல் ( I தீமோ. 4 : 8 ) ல் சரீர முயற்சியில் முயற்சி அற்ப பிரயோஜன முள்ளது  என்று சொல்வதை நாம் அறிந்து கொள்கிறோம். பலர் தங்கள் உடலை மேம்படுத்த பணத்தையும் நேரத்தையும் ஏராளமாக தாராளமாக செலவு செய்கிறார்கள். ஆனால், தேவபக்தியோ இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று சொல்கிறார். அதாவது, ஆவிக்குரிய உடற் பயிற்சியை நாம் செய்வதினால் இவ்வுலகத்திலும் நமக்கு நன்மை உண்டு, இதற்குப் பின்வரும் உலகத்திலும் நமக்கு நன்மை உண்டு என்று சொல்கிறார். சரி, இப்போது சரியான ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கு என்னவெல்லாம் அவசியப்படுகிறது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

**I ஆயத்தம்**

பொதுவாக சரீரப்பிரகாரமான உடற்பயிற்சி செய்வதற்கு முதலில் நாம் ஆயத்தமாக வேண்டும். அதாவது, மனதில் உடற்பயிற்சி செய்ய தீர்மானிக்க வேண்டும். அதைப்போலவே செயல்படுவதற்கும் ஆவல் இருக்க வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியிலும் அது உண்மையாயிருக்கிறது. I பேதுரு 1 : 13 ல் “ ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையை கட்டிக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து இயேசு கிறிஸ்து வெளிப் படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று வாசிக்கிறோம். எனவே, ஒருவர்

ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்பாக மனதளவில் ஆயத்தமாக வேண்டும். மனதில் தீர்மானித்து ஆயத்தமானவுடன் நாம் செயல்படத் தொடங்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் அனுதினமும் கேட்கிறோம். அவைகளை உள்வாங்கிக் கொண்டு கேட்பவைகளை நாம் நடைமுறைப்படுத்தும்போது ஆவிக்குரிய உடற் பயிற்சியைச் செய்கிறோம். அதே போல் உடற்பயிற்சி என்று வரும் போது சில காரியங்களை நாம் திரும்ப திரும்பச் செய்ய வேண்டும். வேதவசனங்களை வாசிப்பது, தியானிப்பது, ஜெபிப்பது போன்றவைகளெல்லாம் ஆவிக்குரிய உடற்பயிற்சிகளாக இருக்கின்றன. நாம் சிறிது நேரம் ஜெபித்துவிட்டு பக்தியாக இருக்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. ஒன்றிரெண்டு வசனங்களை நாம் வாசித்து விட்டு தியானிக்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. அதேபோல் வாரத்தில் ஒரு முறை தேவனை ஆராதித்துவிட்டு தேவனுக்கு உண்மையாயிருக்கிறோம் என்று சொல்லிவிட முடியாது. சிலர், கிறிஸ்துவுக்குள் வந்ததும் ஆரம்ப நாட்களில் மிகவும் ஊக்கமாக ஜெபிப்பார்கள். ஆனால், பாடுகள் வரும்போது அப்படியே பின்வாங்கிப் போய்விடுவார்கள். சரீரப் பிரகாரமான உடற்பயிற்சியில் ஒருவர் தொடக்கத்தில் ஆர்வத்தோடு செய்துவிட்டு சில நாட்கள் கழித்து அதைத் தொடர்ந்து செய்யாதபோது சரீரத்திற்கு எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, அதேபோல்தான் ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட்டுவிட்டு அதைத் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிட்டால் அது ஆத்துமாவில் மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும். ஆவிக்குரிய உடற்பயிற்சியில் தேவனுடைய வார்த்தைகளை அப்பியாசப்படுத்துவதில் தொடர்ச்சி இல்லையென்றால் அது ஆவிக்குரிய வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும்.

### II எதிர்க்கும் திறன்

சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் பயிற்சி செய்ய முடியாதபடி அதற்குத் தடைகள் வரும் போது அவைகளை எதிர்த்து தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால்தான் உடற்பயிற்சியின் நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் தங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக உடலை வருத்தி கடுமையான, கடினமான பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நாமும் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் அதாவது, தேவனுடைய வார்த்தைகளை கைக்கொள்ளும் போது வரும் சோதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் போக்கை நமக்கு உண்டாக்குவார் (1 கொரி. 10 : 13) நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக் கொண்டு அவைகளை எதிர்க்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம். (எபே. 6 : 13).

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்படும் பாடுகள், உபத்திரவங்கள் போன்றவைகளை நாம் மேற்கொண்டு தீங்கை எதிர்த்து நலமானவைகளைப் பற்றிக்

கொண்டால் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் வெற்றி பெறுவோம். நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் எதிர்ப்புக்களோ, தடைகளோ இல்லையென்றால் நாம் மெத்தனப்போக்கைக் கடைபிடித்து வளராமல் இருப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அனுதினமும் வளரவேண்டுமென்று தேவன் எதிர் பார்க்கிறார்.

### III ஆவிக்குரிய ஆகாரம்

எப்படி சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கு ஆகாரம் அவசியமாகிறதோ அதேபோல் ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கும் ஆகாரம் அவசியமாகிறது. அனுதினமும் நாம் பல்வேறுபட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதேபோல் அனுதினமும் நாம் பல விதமான சவால்களை, சோதனைகளை எதிர்கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட நமக்கு பெலனற்றுப் போகும் போது, இவ்வுல கத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள், போன்றவைகள் எவ்விதத் திலும் நமக்கு ஆறுதல் தரவே முடியாது. தேவனுடைய வார்த்தைகளால் மட்டுமே நமக்கு ஆறுதலைத் தர முடியும். தேவனுடைய வார்த்தைகளை நாம் தாராளமாக ஏராளமாக உட்கொள்ளும்போது அது கசப்பான நம் வாழ்வை இனிதாக்குகிறது இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாமல் இருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேபோல் ஆவிக்குரிய போஷாக்கை தொடர்ச்சியாக உட்கொண்டுவிட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமாக அவைகளை அப்பியாசப்படுத்தவில்லை என்றால் அது ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதற்கு அதிக விலையை நாம் கொடுக்காதபடி விழித்திருப்போம். ●

---

## நாளும் நடப்பும்

- காவிரி மனுக்களை விசாரிக்க தனக்கு அதிகாரம் உண்டு : உச்சநீதிமன்றம் அறிவிப்பு.
- நாட்டின் பன்முகத்தன்மைக்கு பொதுமைப்படுத்துதல் மாற்றாக முடியாது – குடியரசு தலைவர்.
- தமிழக முதலமைச்சராக மீண்டும் ஓ. பன்னீர் செல்வம் தேர்வு.
- தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க விவசாய கூட்டமைப்பு வலியுறுத்தல்.
- ரூபாய் நோட்டு விவகாரத்தால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து ஒரு மாதமாக முடக்கம்.
- ஆசிய கோப்பை மகளிர் கிரிக்கெட்டில் இந்திய அணி தொடர்ந்து ஆறாவது முறையாக சாம்பியன்.

சிறுவர் பகுதி

# பிறரை மன்னிப்பது

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு குழந்தைகளே! நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். அன்பு குழந்தைகளே! மீண்டும் இந்த மாதம் உங்களை இந்த இதழின் வழியாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இம்மாதம் பு**திய ஆண்டில் நமக்கு ஆசீர்வாதம் கொண்டு வரும்** ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம். சரியா?.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் தெரிந்தோ அல்லது தெரியாமலோ, தவறுகளைச் செய்துவிடுகிறோம். அப்படித் தவறு செய்யும்பொழுது சில சமயங்களில் நம் தவறுகளை யாராவது, மன்னிக்கவும் செய்கிறார்கள். ஆம், தண்டனைக்கு பதிலாக உங்கள் தவறுகளுக்கு மன்னிப்பு கிடைத்தால், மிகுந்த சந்தோஷமடைவீர்கள். அப்படித்தானே? நாம் அனைவரும் நிச்சயமாகவே சந்தோஷம்தான் அடைவோம். குழந்தைகளே! ஆண்டவராகிய இயேசு நீங்களும் நானும் மற்றவர்கள் செய்யும் தவறுகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் தெரியுமா? இந்த மாதத்திற்கான உங்கள் பாடம் அதுதான். ( மத் 18 : 21 - 22 ) வசனங்களை வாசியுங்கள்.

இங்கே அப்போஸ்தலனாகிய பேதுரு, இயேசுவைப் பார்த்து " என் சகோதரன் எனக்கு விரோதமாய் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ " என்று கேட்டான். அதற்கு இயேசு " ஏழுதர மட்டுமல்ல, ஏழு எழுபது தர மட்டும் என்று பேதுருவுக்கு பதிலளித்தார். இதற்கு அர்த்தம், பிறரை 490 தடவையோ, 70 தடவையோ அல்லது 77 தடவையோ மன்னிக்க வேண்டும் என்பது அல்ல. நாம் எப்பொழுதும் மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பது தான் அதின் உண்மையான அர்த்தம். பரலோக பிதாவினிடத்திலிருந்து நாம் மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, நாம் பிறரை தண்டிப்பது நியாயமாகுமா? இதைப் புரிந்து கொள்ள ஓர் உவமையை இயேசு கூறுகிறார். மத் 18 : 23 - 35 வரை வாசியுங்களே.

இந்த வசனப்பகுதியில் ஒரு ராஜாவையும், ராஜாவின் ஊழியக்காரனையும், இந்த ஊழியக்காரனின் உடன் வேலைக்காரனையும் பற்றி நாம் வாசிக்க முடியும். ஒரு நாள் ராஜா தன்னிடம் கடன் வாங்கியிருந்தவர்களின் பட்டியலை பார்த்தபோது, ஒரு ஊழியக்காரன் **பத்தாயிரம் தாலந்து** கடன் பட்டவனைக் கண்டு பிடித்து அவனைத் தன்னிடம் வரவழைத்தார். என்னிடம் வாங்கிய கடனை கொடுத்தே ஆக வேண்டும் என்று கட்டளையிட்டபொழுது அந்த ஊழியக்காரன் ராஜாவைத் தாழ விழுந்து வணங்கி கொஞ்சம் கால அவகாசம் கேட்டான். அந்த ராஜா மனதிரங்கி அவன் கடனை **மன்னித்து** அனுப்பினார்.

இந்த மன்னிப்பை பெற்ற ஊழியக்காரன் தன் வழியே போகையில் தன்னிடம் **100 வெள்ளிப்பணம்** கடன் வாங்கின தன் உடன் வேலைக்காரனைக் கண்டு அதைத் திருப்பித் தர வேண்டும் என்று " தொண்டையை நெரித்தான் ". அதன் பின்னர் கடனை தீர்க்குமட்டும் அவனைச் சிறையில் அடைத்தான். இந்தச் செய்தி ராஜாவின் காதுக்கு போனது, ராஜா கோபமடைந்து **நான் உன் கடனை மன்னித்தது போல, நீ உன் உடன் வேலைக்காரனின் கடனை ஏன் மன்னிக்கவில்லை** என்று கேட்டு அவனைச் சிறையிலே அடைத்து அவனை உபாதிக்கிற வர்களிடத்தில் கொடுத்தார்.

வச. 35 ல் நாம், **மற்றவர்கள் செய்த தவறுகளை மனப்பூர்வமாய் மன்னிக்க வேண்டும்** என்று கூறுகிறது. நாம் அப்படி செய்யத் தவறினால் ராஜாவின் ஊழியக்காரனுக்குக் கிடைத்த தண்டனையைப் போல நம் பிதா நம்மை தண்டிப்பார்.

பிள்ளைகளே! **கிறிஸ்தவ குடும்பத்து குழந்தைகளாகிய** நமக்கு " **மன்னிப்பு** " என்ற குணம் இருக்க வேண்டும். **வரும் புதிய ஆண்டில்** நாம் மன்னிக்கும் குணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த குணம் உங்க ளிடத்தில் இருக்குமானால் தேவன் நிச்சயமாக உங்களில் **பிரியமாக இருப்பார்**. எப்படி நாம் தவறு செய்யும்போது பிறர் நம்மை மன்னிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அதைப் போல நாமும் பிறர் நமக்கு ஏதாகிலும் தீங்கு செய்யும்பொழுது அதை அவர்களுக்கு மன்னிக்கப் பழக வேண்டும். சரியா குழந்தைகளே? ●

உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# வாழ்க்கையில் திருப்தி இருக்கின்றதா?

Bro. பாண்டியன்

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக. நாம் ஆராதிக்கும் தேவன் தமது ஜனங்கள் திருப்தியான வாழ்க்கை வாழவே விரும்புகிறார். **லேவி. 25 : 18, 19** – அதற்காகவே அவர்கள் கைக்கொள்ளும்படியான தமது கட்டளைகளைத் தந்தது மட்டுமின்றி, அவைகளின்படி நடந்தால் **நீங்கள் திருப்தியாய் சாப்பிட்டு, தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள் என்ற வாக்குத்தத்தையும் கொடுத்துள்ளார்.** ஆக, தேவனுடைய நியாயங்களை மனுஷர் அசட்டை செய்து வாழும் வாழ்க்கையில் அவர்களுக்கு திருப்தியில்லை. மனிதன் அதிகமாகப் பிரயாசப்படுவது கல்வி, நல்ல வேலை, நல்ல வருமானம், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து போன்ற காரியங்களே. ஆனால், அவைகள் எல்லாம் ஒருவனுக்கு ஒருங்கே அமைந்தாலும் உள்ளான மனதில் திருப்தியில்லாமல் புண்ணிய ஸ்தலங்கள் என்ற கற்பனையான இடங்களை நாடிச் சென்று திருப்தியடைய முயற்சிக்கின்றான். ஆனால், அது அவனுக்கு எட்டாக்கனியாகவே இருக்கிறது.

பிரசங்கியின் புத்தகம் மனுஷருடைய வாழ்க்கையை தெள்ளத்தெளிவாக புரியவைக்கிறது. இவ்வுலகத் தத்துவ ஞானிகளைக் காட்டிலும் அதிகமாக வாழக்கைத் தத்துவத்தை தேவஞானத்தின் உதவிக்கொண்டு சாலொமோன் அழகாக விவரித்துள்ளார். **மனுஷன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை** என்ற உண்மையை போட்டு உடைக்கிறார். எனவே, மனுஷர் அனுபவிக்க ஆசைப்படும் அத்தனை இன்பங்களும்கூட மாயையானது, அதினால் திருப்தி கிடைக்க வாய்ப்பில்லை என்பதை அனுபவப்பூர்வமாக விவரித்துள்ளார். அது மாத்திரமல்ல **காண்கிறதினால் கண்கள் திருப்தியாகிறதில்லை; கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை.** பிரச 1 : 8. ஆக, மனுஷன் பார்க்க விரும்புவதைக் கண்ட பிறகும் அவனுடைய மனம் திருப்தியற்றதாகவே இருக்கிறது. அதனால் தான் ஆயிரக்கணக்கான சினிமாக்களும், ஏராளமான பாடல்களும் கேட்கும் ஜனங்கள் இன்னும் தேவை என்பதைப் போல ஏங்கித் திரிகிறார்கள். தங்கள் பணங்களை மனத்திருப்திக்காக ஏராள மாகச் செலவுச் செய்கிறார்கள். ஆனால் வேதம் சொல்கிறது. **ஓ,**

**தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே நீங்கள் வந்து இலவசமாய் பெற்றுக்கொள்ளுங்கள்; பொய்யான உணவுக்காகவும், திருப்தி செய்யாத பொருளுக்காகவும் உங்கள் பிரயாசத்தையும், பணத்தையும் ஏன் செலவழிக்கிறீர்கள்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவி கொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் மனம் மகிழ்ச்சியாகும்** (ஏசா 55:1, 2).

தேவனுடைய கட்டளைகளை அறிந்துகொண்டு கீழ்ப்படியும் போது மட்டுமே மனிதனுக்கு வாழ்வில் திருப்தி கிடைக்கிறது. தேவனுடைய கட்டளைகளை மனிதனுக்கு அறிவிக்கவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகில் இருந்து மனிதவடிவில் பூமிக்கு வந்தார். இதை அறியாத மாந்தர் தங்கள் திருப்தியை வெளியே தேடி ஏமாற்ற மடைந்தவாறு உள்ளனர். கானான் தேசம் வாக்களிக்கப்பட்ட ஜனங்கள் வனாந்தர பிரயாணத்தில் அநேகச் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது எல்லாம் அவர்கள் முறுமுறுத்து தேவனைக் கோபப்படுத்தினார்கள். தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி தண்டனையை அனுபவித்தார்கள். எனவேதான், பவுல் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதும்போது, அவர்கள் (திருப்தியில்லாமல்) முறுமுறுத் ததுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள் (1 கொரி 10 : 10) என்று எச்சரித்துள்ளார். ஏறக்குறைய நம்முடைய சபைவாழ்க்கையும் இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்திர வாழ்க்கைக்கே ஒத்திருக்கின்றது. விசுவாசிகளின் வாழ்வில் சில நேரங்களில் சாத்தான் அவர்களைப் பார்த்து, நீ சமாதானமாக இல்லை; உன் வாழ்வில் திருப்தியில்லை என்கிறதான போலியான ஏமாற்றத்தை உண்டாக்கி மனம் தடுமாற வைக்கிறான். இது அவனுடைய தந்திரம் என்று வேதம் சொல்கிறது. தேவன் நம்மை (குழப்பத் திற்கல்ல) சமாதானத்திற்கே அழைத்திருக்கிறார். அதனால்தான் வேதம் சாத்தானை மோசம் போக்குகிறவன், வஞ்சிக்கிறவன் குற்றஞ்சாட்டுகிறவன் என்றெல்லாம் தோலுரித்துக் காண்பிக்கின்றது.

பொருளாதார விஷயத்தில் எப்போதுமே மனிதன் திருப்தி அடைவ தில்லை! எனவே தான், பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடை கிறதில்லை, செல்வப்பிரியன் செல்வத்தினால் திருப்தியடைகிறதில்லை (பிரச. 5:10) என்று காண்கின்றோம். பழைய உடன்படிக்கையில் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நீ பெருகுவாய், வலது இடது புறங்களிலும் பெருகுவாய், எல்லைகள் பெரிதாகும் போன்ற வாக்குதத்தங்கள் எல்லாம் வெறும் பொரு ளாதாரத்திற்கும், செல்வப் பெருக்கத்திற்கும் சொல்லப்பட்டதாய் அநேக

போதகர்கள் இன்றைக்கும் ஜனங்களை உசுப்பேற்றிக் கொண்டிருக் கிறார்கள். ஆனால், அது புறஜாதிகளும் தேவனுடைய ஜனங்களாக மாறுவார்கள்; தேவ ஜனங்களின் எண்ணிக்கை கிறிஸ்துவின் வருகையால் ( முதலாம் வருகை ) பெருகி ஆசீர்வாதத்திற்குள் நுழைந்த கிறிஸ்தவர் களுக்கு சொல்லப்பட்டது என்ன என்று நாம் புதிய உடன்படிக்கையில் பார்க்கும்போது, போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதும் என்று இருக்கக்கடவோம் 1 தீமோ 6;6-8 என்பது மட்டுமல்ல பவுல் தன் சொந்த அனுபவமாக வாழ்ந்திருக்கவும், தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். திருப்தியாய் இருக்கவும், பட்டினியாய் இருக்கவும் பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் (பிலி 4:12) என்று எடுத்துரைக்கிறதைக் காண்கிறோம்.

சபைவாழக்கையில் அல்லது தேவபக்தியான வாழ்வில் மட்டுமே மனிதன் ஆத்துமத்தேவைகள் மற்றும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளமுடியும். உலகவாழ்வில் நீ எவ்வளவு சம்பாதித்தாலும் தன் ஜீவனை ( உண்மை வாழ்வு ) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் ஒன்றுமில்லை என்கிறார். நமதாண்டவர். தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது திருப்தி நிச்சயம் உண்டு என்பதே அவர் வாக்குத்தத்தமாகும். வனாந்திர வாழ்வில் ஜனங்கள் முறையிட்டு புலம்பினதை போல் நாம் திருப்தியில்லாதவர்களாய் இருக்கக்கூடாது. பார்வோனின் சேனைக்கும் செங்கடலுக்கும் இடையில் சிக்கிய ஜனங்கள் பயந்து அலறினது போல நமது குடும்ப வாழ்க்கையிலும் நாம் அநேக சூழலை சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால், அன்று இஸ்ரயேல் ஜனங்களுக்காக யுத்தம் செய்த அதே தேவனைத்தான் இன்று இயேசு ஆண்டவர் மூலமாய் நாம் ஆராதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறவாதிருங்கள். உங்களுக்காகவும் தேவன் யுத்தம் செய்வார், பயப்படா திருங்கள் என்பதே நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆறுதலாகும். எனவே, வரும் புதியவருடம் எப்படியிருக்குமோ? எப்படி சமாளிப்போமோ என்று அவ நம்பிக்கைக் கொள்ளாதிருங்கள். யுத்தம் கர்த்தருடையது (யாத் 14 : 14). ரூ 500, ரூ 1000 செல்லாது என்று அறிவித்திருக்கிற இச்சூழலிலும் பொருளா தாரப் பிரச்சனைக் குறித்து நாம் அச்சம்கொள்ளத் தேவையில்லை. இம்மட்டும் நடத்தின எபெனேசர் நம்முடன் இருப்பதால்இனிவரும் ஆண் டிலும் நம்மைப் பாதுகாப்பாக நடத்துவார் என்ற விசுவாசம் கொள்வோம்.

கிறிஸ்தவர்கள் முறுமுறுக்கக்கூடாது என்பது அப்போஸ்தலருடைய

உபதேசம். அதில் நாம் நிலைத்திருக்க வேண்டியது நமது கடமை. அப்படி பார்க்கும் போது விசுவாசிகளுக்கு ஒவ்வொரு நாளும் சவாலாகவே உள்ளது. நாமும் மற்றவர்களைப் போல் இல்லாதவைகளைக் குறித்து புலம்பி முறுமுறுக்காமல்; இருப்பதைக்குறித்து தேவனுக்கு நன்றி சொல்லிப் பழகுவோம். மிகப்பேரிய அற்புதமாம் செங்கடல் பிளவுக்குப்பின் வனாந்திரத்தில் மறுபடியும் தண்ணீர் மற்றும் உணவுக்காக ஜனங்கள் முறுமுறுத்து தேவனுக்குக் கோபமூட்டினார்கள் ( எண் 11 : 1 – 4 ) இல்லா தவைகளுக்காக ஜனங்கள் முறுமுறுத்தது நமக்குச் சரி என்பது போலக் காணப்பட்டாலும் தேவன் ஏன் கோபமடைய வேண்டும் என்பது முக்கியமானக் கேள்வியாகும். அதற்கு காரணம், ஏற்கெனவே பல பெரிய பிரச்சனைகளில் தேவன் உதவி செய்திருக்கும்போது இப்போதும் உதவு வார் என்ற விசுவாசம் ஜனங்களுக்கு ஏன் இல்லை என்பது தேவன் நம்மைப் பார்த்துக் கேட்கும் பதில் கேள்வியாகும். கிறிஸ்துவின் காலத்தில் சீஷர்கள் அநேக அற்புதங்களைக் கண்டிருந்தும், படகு அமிழத்தக்கதாக கடல் கொந்தளித்த போது சீஷர்கள் பதறிப்போய் ஆண்டவரை எழுப்பியதற்கு அவரிடம் திட்டுதான் பரிசாகக் கிடைத்தது (மத் 8 : 26) அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள்? என்று ஆண்டவர் கேட்கிறார். கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களுக்கு விசுவாசிகள் என்ற பெயரும் உள்ளது (அப் 2 : 44). காரணம் நாம் தேவனையும் அவருடைய வல்லமையையும் அறிந்து விசுவாசித்திருக் கிறோம். அவர் மரித்தோரில் இருந்து எழுப்பிய அவருடைய குமாரனும் நமது இரட்சகருமாகிய இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக் கிறோம். ஆகவே, நமக்கு வரும் பிரச்சனைகளில் சோர்ந்து போகாமல், முறுமுறுக் காமல் விசுவாசமாய் இருக்க முடிவு செய்வோம். அப்போதுதான் முறுமுறுக்காமல் திருப்தியான வாழ்க்கை வாழ நம்மால் முடியும்.

இஸ்ரயேல் ஜனங்களைப் பார்த்து தேவன் கேட்டார்; நீங்கள் அப்ப மல்லாததற்காகப் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாகச் செவிகொடுத்து, நலமானதைதச் சாப்பிடுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் (ஏசா 55 : 1, 2) இன்றைக்கும் அநேகர் திருப்திதராத விஷயங்களுக்காகத் தங்கள் நேரங் களையும், பணத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆண்ட வராகிய இயேசு அப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் என்றும், அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலை நிற்கும் போஜனத் திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷக்குமாரன் உங்களுக்குக்

கொடுப்பார் என்றார். மேலும், என் மாம்சத்தைப் புசித்து என் ரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாட்களில் எழுப்புவேன் என்கிறார். இவையாவும் கிறிஸ்துவின் உபதேசங் களைக் குறிக்கிறதாயிருக்கிறது. அவருடைய உபதேசமே ஒருவனை சுத்த மாக்க வல்லமையுடைய அதில் நிலைத்திருக்கும்போது நீங்கள் வேண்டிக் கொள்வதை பெற்றுக்கொள்வீர்கள் என்று ஆண்டவர் கூறுகிறார் (யோ. 15 : 3, 7).

வழியினிமித்தம் வனாந்திரத்தில் ஜனங்கள் மனமடிவாகி முறுமுறுத்த போது தேவன் கோபமடைந்து அவர்களை அழிக்கும்படிக்கு கொள்ளிவாய்ச் சர்பங்களை அனுப்பினார் (எண் 21 : 4 - 6). இப்போது அவிசுவாச வார்த்தைகளை பேசுகிற நம்மீது தேவனுக்குக் கோபம் வராதா? என்றால் நிச்சயம் வரும்! ஆனால் நம் கிருபையுள்ள ஆண்டவர் இயேசு நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருப்பதால் நாம் அழிவிலிருந்து தப்பிக்கொண்டிருக்கிறோம் (1 யோவா 2 : 1) விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே என்கிறார் பவுல். நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம், சொல் தவறாதவனே பூரணபுருஷன் என்கிறார், யாக்கோபு. இப்படிப்பட்ட நம்மை அவருடைய உபதேசத்தினால் ஒழுங்குபடுத்தவே சபை கூடுதலை தேவன் வைத்திருக்கிறார். ஆக, திருப்தியான வாழ்வுக்கு பொருளை விட தேவ ஒத்தாசையே அதிகம் தேவைப்படுகிறது. **சஞ்சலத் தோடுக்கூடிய அதிகப்பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப்பொருளே உத்தமம்** நீதி 15 : 16 என்பது ஞானியும் ஐசுவரிய வானுமாகிய சாலொமோனின் வார்த்தைகள். இவ்வுலக இன்பங்களைப் பற்றி எல்லாம் அறிந்து அதில் ஒன்றுமில்லை, மாயை என்று மனம்சலித்து முடிவாக தேவனுக்குப் பயந்து அவருடையக் கற்பனைகளைக் கைக்கொள்! எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்று முடிக்கிறார் அவர். செல்வம் மிகுந்த எபிரெய ஜனங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன் வந்தபோது அவர்களுக்குச் சொல்லப்பட்ட ஆலோசனை என்ன? நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக்கை விடுவதுமில்லை என்று தேவன் சொல்லியிருக்கிறாரே (எபி 13 : 5) உண்மை திருப்தி தேவனுடைய வீடாகிய சபை வாழ்வில் இருக்கிறது சங் 65 : 4. உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம் என்கிற தாவீதின் சங்கீதத்திற்கு இணங்க பரலோகின் தேவன் நமது திருப்தியான வாழ்க்கை தொடர ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

●

# "நாம் எப்படி வாழ்வோம்?"

# " How Shall We Live? "

Clinton Storm

**தே**வகிருபை நமக்கு இரட்சிப்பை கொண்டுவந்தது, மேலும், நாம் எப்படி வாழவேண்டுமென்று போதித்திருக்கிறது. இந்த அழகான வசனப் பகுதியை வாசியுங்கள்: ஏனெனில், எல்லா மனுவுருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி....... (தீத்து 2 : 11,12).

முதலாவது, இரண்டு எதிர்மறையான காரியங்கள் இங்கே உள்ளன. இரண்டு காரியங்களையும் நாம் அறவே ஒழிக்க வேண்டும்.

அவபக்தி, அதாவது தேவபக்திக்கு எதிரான எல்லா காரியங்களுமே அவபக்தியானவைகள்தான். நாம் தீமையை எதிர்த்து நிற்க வேண்டும்.

லௌகிக இச்சைகள், சில வேளைகளில் இச்சை என்னும் வார்த்தை நல்லவிதமாகவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த வசனப் பகுதியில் மோசமான ஆசையாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, நம் வாழ்க்கை முறை சம்மந்தமாக மூன்று நேர்மறையான தேவைகள் உள்ளன:

தெளிந்த புத்தியுடன் வாழவேண்டும். கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தி யுள்ளவர்களாகவும், சுயக்கட்டுப்பாடு உடையவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும்

நீதியாக வாழ வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தைக்கு இசைவான, செம்மையான வாழ்க்கை வாழ வேண்டும். தீமோத்தேயு பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, நீதியை அடையும்படி நாட அறிவுறுத்தப்பட்டார் (II தீமோத்தேயு 2 : 22).

தேவபக்தியாக வாழவேண்டும். கிறிஸ்தவர்கள் பக்தியுள்ள தேவனுக்கு மரியாதை செலுத்துகிற வாழ்க்கை வாழ வேண்டும்.

நாம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்போது, ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (தீத்து 2 : 13).

தேவனுடைய ஆச்சரியமான கிருபைக்காக அவருக்கு கோடானகோடி ஸ்தோத்திரம்.

# இயேசு இரண்டு முறைதான் "பேதுரு" என்று அழைத்தார்

Bro. Kevin L. Moore

**அ**ந்திரேயாவின் சகோதரன் இயேசு கிறிஸ்து பார்த்த முதல் நாளில் அவர் அவனைப் பார்த்து " நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா எனப்படுவாய் " என்றார். (யோவான் 1: 42). கேபா என்பது பேதுரு என்பதன் அராமிக் மொழியாக்கம் ஆகும், அதன் பொருள் " கல் " என்பதாகும். அதாவது, உறுதித்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையை குறிக்கும் வகையில் உருவகநடையில் " கல் " என்று பேதுரு இயேசு கிறிஸ்துவால் அழைக்கப் பட்டார். ஆனால், இதற்குப் பிறகு, புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் எப்போதெல்லாம் இந்த சீடனை அழைத்தாரோ அப்போதெல்லாம் பெரும்பாலும் பேதுரு என்றழைக்காமல் சீமோனே என்று தான் அழைத்திருக்கிறார். ஏன் அப்படி அழைத்தார்?

சீமோன் என்னும் பெயர் சிமியோன் என்னும் எபிரெய பதத்திற்கு இணையான வார்த்தையாகும். அதன் எபிரெய பொருள் " அவர் கேட்டருளி " என்பதாகும் ( ஆதியாகமம் 29:33 ). இதன் மற்றொரு உட்பொருள் " கவனித்தல் '' என்பதாகும். சுவிசேஷப் புத்தகங்கள் பேதுருவை முன்யோசனையின்றி செயல்படுபவராகவும்; தவறாகப் புரிந்துகொள்வதில் முதலிடத்தைப் பிடிப்பவராகவும் காட்டுகிறபடியால் " கவனித்தல் " என்னும் பதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆகவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீமோனே என்று எப்போதெல்லாம் அழைத்தாரோ அப்போதெல்லாம் சீமோனுக்கு " கவனிக்கும் தேவை " இருக்கிறது என்பதை சாதுரியமாக நம் ஆண்டவர் உணர்த்தினார். நம் அருமை இரட்சகர் இரண்டு சம்பவங்கள் தவிர மற்ற எல்லா நேரங்களிலும் பேதுருவைப் பார்த்து சீமோனே என்று தான் அழைத்திருக்கிறார்.

நம் ஆண்டவர் ஊழியத்தை ஆரம்பித்து சுமார் இரண்டு வருடங்கள் கழித்து அவருடைய அடையாளத்தைப் பற்றி வேறுபட்ட கருத்துகள் நிலவியபோது இந்த சீமோன் பேதுரு தான் (மத்தேயு இவரை இப்படித்தான் அழைக்கிறார் ). " நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து " என்று பகிரங்கமாக தன்னுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தினார் ( மத்.

16 : 16 ). பின்பு இயேசு அவனைப் பாராட்டி " யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்; மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன்; நீ பேதுரு வாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாளாத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை " என்றார் (மத். 16:17). கிரேக்க மொழியில் நாம் பார்க்கும்போது ஆங்கில மொழியாக்கத்தில் சில குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதை அறிந்துகொள்ள முடியும். இங்கே பேதுரு அல்லது அராமிக் மொழியில் கேபா என்றழைக்கப்படும் பெயர் "Petros" என்று கிரேக்க மொழியில் இருக்கிறது. அதன் பொருள் ஒரு பெரிய பாறையின் துண்டு அல்லது கல் என்பதாகும். இது ஆண்பால் பெயர்ச் சொல்லாகும். அதாவது, இந்த "Petros" என்னும் பதம் ஆண்பால் பெயர்ச் சொல்லாக இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து " என் சபை " என்று சொல்லும்போது பேதுரு அங்கே ஒரு சிறு கல்லாகத்தான் இருக்கிறார். ஆனால், இயேசு சபையைக் கட்டுபவராகவும் அதன் அஸ்திபாரமாகவும் இருக்கிறார். அதாவது, இங்கே கருத்து " இயேசு, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து " என்னும் நிலைத்திருக்கும் சத்தியத்தின் மீது சபை கட்டப்பட்டிருக்கிறது என்பதாயிருக்கிறது. அல்லது ( I கொரி. 3 : 11 ல் ) சொல்லப்பட்டது போல் " போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ் துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது " என்பதாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து பேதுருவே என்றழைத்த மற்றுமொரு சம்பவம் லூக்கா இருபத்திரெண்டாம் அதிகாரத்தில் இடம்பெற்றிருக்கிறது. இயேசு இரட்சகர் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய சாயங்கால வேளையில், அந்த மேல்வீட்டில் சீசர்கள் தங்களில் யார் பெரியவன் என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள் (லூக்கா 22 : 24 ). 31 ஆம் வசனத்தில் நம் ஆண்டவராகிய இயேசு சீமோனே, சீமோனே என்று பேதுரு வை தனியாக அழைக்கிறார். இங்கே இயேசு இப்பெயரை திரும்பத் திரும்ப அழைப்பதைக் கவனியுங்கள். அவர் சீமோனிடம் என்னச் சொல்லப் போகி றாரோ அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இரண்டு முறை சீமோனே, சீமோனே என்று அழைத்தார். மேலும், சீமோனே சீமோனே என்று இரண்டு முறை அழைத்ததற்கான காரணம் நான் சொல்லப்போறதை "கவனி கவனி '' என்று இயேசு கிறிஸ்து சாதுரியமாக அழைத்தார். பேதுரு எதிர்கொள்ளவிருந்த விசுவாச சவாலை இயேசு கிறிஸ்து அறிந் திருந்த படியால் அவரை ஆறுதல்படுத்தும் விதமாக " நானோ உன் விசுவாசம்

ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார் ” (லூக்கா 22:32).

கிறிஸ்துவின் வார்த்தைகளை ஜாக்கிரதையாக கவனிப்பதற்குப் பதிலாக பேதுரு முன் யோசனையின்றி துடிப்புடன் : “ ஆண்டவரே காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்” (வசனம் 33). பேதுருவின் உள்நோக்கம் எவ்வளவு நேர்மையாக இருந்தாலும், அவருடைய பேச்சு எவ்வளவு உன்னதமான ஒன்றாக இருந்தாலும், பேதுருவின் காவலும், மரணமும் தெய்வீக மீட்பின் திட்டத்திற்கு எந்த அளவு தொடர்புடையதாயிருக்கும்? தேவ ஆட்டுக் குட்டிதான் பாடுபடவும் மரிக்கவும் வேண்டியதாயிருந்தது வசனம் (19 - 22). ஆனால் தேவன் சீமோனுக்காக வேறொரு திட்டத்தை வைத்திருந்தார்.

முன்யோசனையின்றி துடிப்புடன் பேசிய பேதுருவுக்கு நம் ஆண்டவர் “ பேதுருவே இன்றைக்குச்சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் ” என்று மறு உத்தரவு கொடுத்தார் ( வசனம் 34 ). இந்த இடத்தில் நம் ஆண்டவர் ஏன் “ பேதுருவே ” என்றழைக்கிறார்? சீமோனே சீமோனே அதாவது “ கவனி, கவனி ” என்பதற்கு இவ்விடத்திற்கு பொருத்தமாக இருக்குமல்லவா? இதற்கு முன்பு நம் ஆண்டவர் அதை முயற்சித்திருக்கிறார். ஆனால், அதில் பயனில்லை என்று கண்டார். இயேசு கிறிஸ்து எப்போதுமே வார்த்தைகளை சரியாகப் பயன்படுத்துவதில் மிகவும் கவனமாக இருப்பார். அவர் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் பின் ஒரு காரணமிருந்தது. இந்த இடத்திலும் அவர் “ பேதுருவே ” என்று காரணத்தோடுதான் அழைத் திருக்கிறார். நம் இரட்சகர் பேதுருவிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவருடைய முகபாவனை எப்படியிருந்தது? என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால், சீமோன் தன்னுடைய புதிய பெயருக்கு ( பேதுரு ) ஏற்ப வாழவேண்டுமென்று கிறிஸ்துவால் எதிர்பார்க்கப்பட்டார். ஆனால் பேதுரு அந்நேரத்தில் அந்நிலையில் இல்லை.

யோவான் 1 : 42ல் கிறிஸ்துவின் வாக்கியம் உடனடியான பெயர் மாற்றமாக இல்லாமல் ஒரு தீர்க்கதரிசனமாகத்தான் இருந்தது “ நீ கேபா எனப்படுவாய் ” என்றுதான் இருந்தது. சீமோனின் பலவீனங்கள் குறைகள் போன்றவைகளையும் தாண்டி அவருக்குள் இருந்த திறமையை நம் ஆண்டவரால் காணமுடிந்தது. அதை யாரும் கவனிக்கவில்லை, பேதுரு கூட அதை கவனிக்கவில்லை. மிகுந்த பொறுமையுடனும் உறுதியுடனும் இயேசு கிறிஸ்து இந்த பெலவீனமான மனிதனோடு தொடர்ந்து வேலை செய்தார். ஆனால் அதே நேரத்தில் தேவனுடைய சித்தத்தை

நிறைவேற்றுவதற்குத் தேவையான உறுதியான பண்பு பேதுருவினிடத்தில் உருவாகும்வரை வாயை மூடி காதுகளைத் திறக்கும்படி இருந்தார்.

நம் ஆண்டவருடைய தனிப்பட்ட ஊழியம் இப்பூமியில் நிறைவடைந்து, அவருடைய ஊழியம் உண்மையுள்ள சீசர்களிடத்தில் ஒப்புக் கொடுக்கப் பட்ட பிறகு அப்போஸ்தலனாகிய சீமோன் பேதுரு என்ற பெயரோடு இணைக்கப்படாமல் “ சீமோன் ” என்று மாத்திரம் அழைக்கப்பட்டது வேதாகமத்தில் ஒரே ஒரு இடத்தில்தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (அப். 15:14). இங்கே சீமோன் என்பதற்கான எபிரெய நடையான “ சிமியோன் ” என்னும் பெயரை யாக்கோபு குறிப்பிடுகிறார். இவ்வசனத்தில் யாக்கோபு சீமோன் பேதுருவினிடத்தில் பேசவில்லை, ஆனால் அவரைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். “ சீமோன் ” என்னும் பெயரில் புதைந்திருக்கும் பொருளான “ கவனி ” என்பது இந்த இடத்தில் பேதுருவுக்கு சொல்லப்பட வில்லை. பேதுரு பேச அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத்தான் சொல்லப்பட்டது (வசனங்கள் 7-11). இப்போது பேதுரு (கல்) தேவனுக்கான உறுதியான நம்பகமான ஒரு பிரதிநிதியாக மாறி தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறார். மற்றவர்கள் இப்போது பேதுருவுக்கு செவிகொடுக்கும் படியாக உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

இங்கே கற்றுக்கொள்வதற்கு ஏதாவது பாடம் இருக்கிறதா? கர்த்தருக் காக நான் எந்த அளவுக்கு காரியங்களைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நான் செய்கிறேனா? அவருடைய சேவையில் என் நோக்கத்தை நிறைவேற்றுகிறேனா? இது நிச்சயமாக நான் தேவனுடைய சித்தத்திற்கு எந்த அளவு என்னை மாற்றிக் கொள்கிறேனோ அதைச் சார்ந்ததாயிருக் கிறது. வேறுவிதமாகச் சொன்னால், கவனிப்பதற்கும் கற்றுக்கொள்வ தற்கும் வளர்வதற்கும் உண்மையான முயற்சிகளை எடுக்கிறேனா? நான் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாவிட்டாலும்கூட, தேவன் என்னில் காணும் திறமையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுகிறேனா? மேலும், நமக்குள் சில முறைகள் இருந்தாலும் கர்த்தருக்காக பயன்படக்கூடிய திறமைகளை ஒருவரிலொருவர் நாம் காண்கிறோமா? தேவன் எதிர்பார்க்கிற அளவுக்கு விசுவாசத்தில் உறுதியான ஜனங்களாக நாம் வளர, மற்றவர்கள் வளர “ போதுமான அளவு பொறுமையும், மனநிர்ணயமும் உடைய வர்களாக இருக்கிறோமா? ” மனுசரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்மடிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்ட மாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் என்று பேதுரு நமக்கு நினைப்பூட்டுகிறார் ( I பேதுரு 2 : 45 ). நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோமா? ●